**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No. 150/2025**

**நாள் : 01.07.2026**

**எ.ம.சா.** 1 (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.லாவண்யா | மாவட்டம் | : | சென்னை |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.காமாட்சி | வயது | : | 26 |
| ஊர் | : | சென்னை | தொழில் | : | TATA AIG மேலாளர் |
| வட்டம் | : | சென்னை | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை**

1. Policy terms and conditions true copy – எ.ம.சா.ஆ.1

2. இறுதி அறிக்கை நகல் – எ.ம.சா.ஆ.2

மனு தள்ளுபடியாக வேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

**மனுதாரரின் குறுக்கு விசாரணை**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். உரிமையாளருக்கும், பயணம் செய்பவர்களுக்கும் காப்பீடு செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் விபத்தின் போது இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் உரிமையாளராக இருந்தால் மட்டுமே காப்பீடு வழங்கப்படும். உரிமையாளரின் வேலை சம்பந்தமாக அவரது அனுமதியின் பேரில் அவரது தம்பி விஜி என்ற விஜயகாந்த் ஓட்டி சென்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காப்பீட்டு நிபந்தனைகள் மீறப்படவில்லை என்பதால் நாங்கள் தான் நஷ்டஈடு

வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. அவர் வாகனத்தை பொறுத்தவரையில் மூன்றாம் தரப்பினர் இல்லை, வாகனத்தின் உரிமையாளரும் இல்லை, அவருக்கு ஓட்டுநர் உரிமமும் இல்லை என்பதால் நிறுவனம் நஷ்டஈடு வழங்க தேவையில்லை. வாகனத்திற்கும், பாலிசிக்கும் விஜய்காந்த் மூன்றாம் தரப்பினர் என்பதால் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.